TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8029490

1. District : அரியலூர் மாவட்டம் PS: ஊ.த.க. பிரிவு காவல்நிலையம் அரியலூர் Year: 2019 ஆண்டு FIR No.: 5/2019 மு.த.அ. எண் Date: 24.10.19. நாள்

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended
   (ii) Act சட்டம்: by the PC Act (Amendment)
   (iii) Act சட்டம்: 2018 and Crpc.

   Sections பிரிவுகள்: 7 of PC Act 1988
   Sections பிரிவுகள்: as amended by the PC
   Sections பிரிவுகள்: (Amendment) Act-2018 and 102 Crpc.

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் 23.10.2019 Date from : நாள் முதல் 15.30 Hrs Date to : நாள் வரை 20.00 Hrs.

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24.10.19. Time : நேரம் 19.00 Hrs. 20.00 Hrs.

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி தட்டச்சு மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து உள்ள தூரமும், திசையும் 3 கி.மீ - வ.மே.

   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி உதவி ஆணையர், தொழிலாளர் அலுவலகம், சின்ன கடைத்தெரு, அரியலூர்.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருந்தால், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டவர்/ தகவல் தந்தவர் பெயர் திரு.பெ. வேலுமணி (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் பெரியசாமி

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 47/19 (d) Nationality நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் தற்காலிக மாவட்ட துணை இயக்குநர் (நி) அலுவலர் / மண்டல துணை வட்டாட்சியர் (g) Address : முகவரி செந்துறை வட்டாட்சியர் அலுவலகம், அரியலூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டுக்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   S.O. திருமதி. K. காமாட்சி. உதவி கணக்கு அலுவலர் / உதவி ஆணையர் தொழிலாளர் அலுவலகம், அரியலூர் அரியலூர் மாவட்டம். மற்றும் சிலர்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையிட்டவரால் / தகவல் கொடுப்பவரால் முறையிடுதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   வாதியால் தாமதம்.

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / கலந்துள்ள சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / கலந்துள்ள சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது இன்று 24.10.2019 ஆம் தேதி பகல் 19.00 மணிக்கு அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் R.சந்திரசேகர் ஆகிய நான் அலுவலகத்தில் பணியில் இருந்த போது திரு.பெ.வேலுமணி, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர்/மண்டல துணை வட்டாட்சியர், செந்துறை அரியலூர் மாவட்டம் என்பவர் என்முன் ஆஜராகி கொடுத்த புகாரின் விபரம் பின்வருமாறு. அனுப்புதல் பெ.வேலுமணி, மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் (தற்காலிகம் / மண்டல துணை வட்டாட்சியர், செந்துறை தாலுக்கா, அரியலூர், பெறுதல் காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, அரியலூர். அய்யா, பொருள் : அரியலூர் மாவட்டம், அரியலூர் தாலுக்கா, தொழிலாளர் உதவி ஆணையர் அலுவலகம் 23.10.2019 அன்று அரியலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களுடன் திடீர் சோதனை மேற்கொண்ட – மேல் நடவடிக்கை எடுக்க வேண்டி புகார் கொடுத்தல் தொடர்பாக. பார்வை : 1. அரியலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் அ1/411/2019, நாள் 23.10.2019,

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ..............................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே தந்த முறைப்பாட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லைக் கருதி புலனாய்வுக்கு .............................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறைப்பட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறைப்பட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

24/10/19
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name பெயர் R.Chandrasekar
Rank: நிலை D.SP./VRAC No. எண் .........
அரியலூர்.

GCP-243-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)p 2

**அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 5/2019 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி :–**

2. திடீர் சோதனை செயல்முறைகள் நாள் 23.10.2019. அரியலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களின் பார்வை 1–ல் கண்ட உத்தரவின் பேரில் நான் அரியலூர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராக (தற்காலிகம்) நியமணம் செய்யப்பட்டேன். அரியலூர் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற தொலை பேசி ரகசிய தகவலின் அடிப்படையில் 23.10.2019 ஆம் தேதி மாலை அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திலிருந்து, காவல் துணைகண்காணிப்பாளர் திரு.R.சந்திரசேகர் மற்றும் விஜிலென்ஸ் குழுவினருடன் புறப்பட்டு அரியலூர் மாவட்டம், அரியலூர் தாலுக்கா, சின்னக்கடைத் தெருவில் பாங்க் ஆஃப் பரோடா வங்கி அருகே உள்ள தொழிலாளர் உதவி ஆணையர் அலுவலகத்திற்கு 23.10.2019 ஆம் தேதி 15.30 மணிக்கு சென்று திருமதி.காமாட்சி, உதவி கணக்கு அலுவலர் மற்றும் அங்கிருந்தவர்களிடம் என்னையும், காவல் துணைகண்காணிப்பாளர் மற்றும் விஜிலென்ஸ் குழுவினரையும் அறிமுகம் செய்து கொண்டு தொழிலாளர் உதவி ஆணையர் அலுவலகத்தை 15.30 மணிமுதல் 20.00 மணிவரை அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணைகண்காணிப்பாளர் திரு.R.சந்திரசேகர் மற்றும் விஜிலென்ஸ் குழுவினர் உதவியுடன் திடீர் ஆய்வு மேற்கொண்டு, சோதனையின் போது கணக்கு கூற இயலாத மற்றும் கையூட்டு தொகையாக கருதக்கூடிய ரூபாய். 17,300/– அரியலூர் தொழிலாளர் உதவி ஆணையர் அலுவலகத்திலிருந்து கைப்பற்றப்பட்டு, அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலக மடிகணினி மூலம் திடீர் ஆய்வு செயல்முறைகள் தயார் செய்யப்பட்ட விபரம் பின்வருமாறு. அரியலூர் மாவட்டம், சின்னக் கடைத்தெரு, பாங்க் ஆஃப் பரோடா வங்கி அருகில் உள்ள தொழிலாளர் உதவி ஆணையர் (ச.பா.தி) அலுவலகத்தில் புதிதாக தொழிலாளர்கள் உறுப்பினராக சேர்ப்பதற்கு விண்ணப்படிவம் பெறவும் மற்றும் பதிவினை புதுப்பிக்கவும் மேலும் 2–ம்படி அடையாள அட்டை வழங்குதல், பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு நலதிட்ட உதவிகள் வங்கி கணக்கில் செலுத்துதல், திருமண உதவி, மகப்பேறு, கல்வி, ஓய்வூதியம், விபத்து மரணம் மற்றும் ஈமச்சடங்கு ஆகியவற்றிற்கு அரசு உதவி தொகை வழங்குவதற்காகவும், பொது பணியாளர்களுக்காக, பொதுமக்களிடம் கையூட்டு பெறுவதாக அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, அலுவலகத்திற்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் இன்று 23.10.2019 ஆம் தேதி மாலை 15.30 மணிக்கு அரியலூர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலரால் (தற்காலிகம்) மற்றும் விஜிலென்ஸ் குழுவினர் சகிதம் தொழிலாளர் உதவி ஆணையர் (ச.பா.தி) அலுவலகத்தில் திடீர் சோதனை

மேற்கொள்ளப்பட்டது. மேற்படி அரியலூர் மாவட்ட தொழிலாளர் உதவி ஆணையர் (சமூக பாதுகாப்பு திட்டம்)அலுவலகமானது சின்னக்கடைத் தெரு பாங்க் ஆஃப் பரோடா வங்கி அருகில் கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. வடக்கு பக்கமாக ராஜா டிரேடர்ஸ், ராஜாமணி பேங்கர்ஸ்சும், எதிரே கீழ்புறம் வரிசையாக அஸ்வின்ஸ் சுவீட்ஸ், திவ்யா பேங்கர்ஸ், வாருமான் பேங்கர்ஸ், அரவிந்த் சலூன் உள்ளது. மேற்படி அலுவலகத்தின் நுழைவாயிலானது இரும்புடன் கூடிய வாயிலுக்கு அடுத்தார்போல் பெரிய ஹால் உள்ளது. ஹாலின் இடது புறம் EB அறையும், பதிவு விண்ணப்பம் பெறும் பாக்கியராஜின் இருக்கையும், அடுத்தார் போல் செந்தில்வேலன் உதவியாளர் மற்றும் சின்னதுரை உதவியாளர் ஆகியோரின் இருக்கையும், அதன் அருகே உதவி கணக்கு அலுவலர் திருமதி.காமாட்சி இருக்கையும், அதற்கு மேற்குபுறமாக திருநாருல்லா கண்காணிப்பாளர் இருக்கையும், அதன் மேற்குபுறமாக உதவி ஆணையர் கேபினும் அதில் சிசிடிவி கணினி உபகரணங்களும், அதன் மேற்குபுறமாக ஆவணங்கள் அறையும், அதன் வடமேற்காக கழிப்பறையும், அலுவலகத்தின் உள்ளே வலதுபுறம் மணிமேகலை உதவியாளர் இருக்கையும், அதன் மேற்குபக்கம் கபோர்டும், அடுத்தாற்போல் உதவிதொகையை பதிவு செய்யும் திரு.பிரபாகரன், ரம்யா, பகவதி ஆகியோரது இருக்கையும், அடுத்தார் போல் கபோர்டும், அடுத்தார் போல் கணினி ஆப்ரேட்டர் சாந்தி ராமேஷ்வரி இருக்கையும், கபோர்டும், கணினி ஆப்ரேட்டர் பெரியசாமி இருக்கையும், அடுத்தார்போல் ஆவணங்கள் ரேக்கும் உள்ளது. இவ்வாறாக அரியலூர் தொழிலாளர் உதவி ஆணையர் (ச.பா.தி) அலுவலகம் அமைந்துள்ளது. திடீர் ஆய்வு குழுவினர் அரியலூர், தொழிலாளர் உதவி ஆணையர் (ச.பா.தி) அலுவலகத்திற்குள் வந்தபோது 1) திருமதி.காமாட்சி உதவி கணக்கு அலுவலர், 2).திருநாருல்லா கண்காணிப்பாளர், 3)திரு.சின்னதுரை உதவியாளர், 4) திரு.செந்தில்வேலன் உதவியாளர், 5) திருமதி மணிமேகலை உதவியாளர், 6) திரு.சுரேஷ்பாபு அலுவலக உதவியாளர், 7) திருமதி.சாந்தி ராமேஷ்வரி கணினி ஆப்பரேட்டர், 8) திரு.பிரபாகரன் எழுத்தர் (தற்காலிகம்), 9) திருமதி.ரம்யா எழுத்தர் (தற்காலிகம்), 10) திருமதி. பகவதிகணினி ஆப்பரேட்டர் (தற்காலிகம்), 11) திரு.பெரியசாமி கணினி ஆப்பரேட்டர் (தற்காலிகம்), 12) திரு.பாக்கியராஜ் எழுத்தர் (தற்காலிகம்), ஆகியோர் இருந்தனர். அனைவருக்கும் திடீர் சோதனை செய்ய வந்துள்ள நோக்கத்தை மாவட்ட துணை ஆய்வு குழு அலுவலர் மற்றும் விஜிலென்ஸ் குழுவினர் தெரிவித்தபோது மேற்படி அலுவலகத்தில் இருந்த சில நபர்கள் அவர்கள் நின்று கொண்டிருந்த இடத்தை விட்டு நழுவ முயற்சித்தார்கள். மாவட்ட துணை ஆய்வு குழு அலுவலர் அங்கிருந்தவர்களை

நிறுத்தி விஜிலென்ஸ் குழுவினர் உதவியுடன் அவர்களை தனித்தனியாக விசாரித்தும், சோதனை மேற்கொண்டபோது 1)திருமதி. காமாட்சி உதவி கணக்கு அலுவலர் தனது கைப்பையில் ரூ.3010/– வைத்திருந்தார் அந்த பணமாது தனது சொந்த பணம் என்று சரியான முகாந்திரம் கூறியதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அவரது அறையில் இருந்த பீரோவில் இரண்டு கவர்களில் ஒரு கவரில் ரூ.700/–ம் மற்றொரு கவரில் ரூ.1300/–ம் இருந்தது. ரூ.700/– ஆனது அலுவலக நிரந்தர வைப்புத் தொகை என்று ஆவணங்களை காண்பித்ததால் சரிபார்க்கப்பட்டு அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. ரூ.1300/– பணத்திற்கான சரியான முகாந்திரம் கூறஇயலாததால் கைப்பற்றப்பட்டது. 2)அலுவலக கண்காணிப்பாளர் திரு.நூருல்லா என்பவர் தனது சட்டைப்பையில் ரூ.630/– வைத்திருந்தார் அந்த பணமானது தனது சொந்த பணம் என்று சரியான முகாந்திரம் கூறியதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. 3)உதவியாளர் திரு.சின்னதுரை என்பவர் தனது சட்டைப்பையில் ரூ.1670/– வைத்திருந்தார் அந்த பணமானது தனது சொந்த பணம் என்று சரியான முகாந்திரம் கூறியதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. 4) உதவியாளர் திரு.செந்தில்வேலன் என்பவர் தனது பர்சில் ரூ.520/– வைத்திருந்தார் அந்த பணமானது தனது சொந்த பணம் என்று சரியான முகாந்திரம் கூறியதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. 5)உதவியாளர் திருமதி. மணிமேகலை என்பவர் தனது பர்சில் ரூ.20/–வைத்திருந்தார். அந்த பணமானது தனது சொந்த பணம் என்று சரியான முகாந்திரம் கூறியதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. 6)திரு.சுரேஷ்பாபு என்பவரிடம் பணம் எதுவும் இல்லை. 7)திருமதி.சாந்தி ராமேஷ்வரி கணினி ஆப்ரேட்டர் என்பவர் தனது பர்சில் ரூ.20 வைத்திருந்தார். அந்த பணமானது தனது சொந்த பணம் என்று சரியான முகாந்திரம் கூறியதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. 8)திரு.பிரபாகரன் எழுத்தர் (தற்காலிகம்) என்பவர் தனது பர்சில் ரூ.170 வைத்திருந்தார், அந்த பணமானது தனது சொந்த பணம் என்று சரியான முகாந்திரம் கூறியதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. 9)திருமதி.ரம்யா எழுத்தர் (தற்காலிகம்) என்பவர் தனது கைப்பையில் இரண்டு இடங்களில் ரூ.19,000/– வைத்திருந்தார் அதில் ரூ.3000க்கு சரியான முகாந்திரத்துடன் கூறியதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது, மேலும் மீதத் தொகையான ரூ.16,000/–க்கு சரியான முகாந்திரம் கூற இயலாததால் கைப்பற்றப்பட்டது. 10)திருமதி. பகவதி கணினி ஆப்ரேட்டர் (தற்காலிகம்) என்பவர் தனது பர்சில் ரூ.2270/– வைத்திருந்தார். அந்த பணமானது தனது சொந்த பணம் என்று சரியான முகாந்திரம் கூறியதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. 11) திரு.பெரியசாமி கணினி ஆப்ரேட்டர் (தற்காலிகம்) என்பவர்

தனது சட்டைப்பையில் ரூ.60 வைத்திருந்தார், அந்த பணமானது தனது சொந்த பணம் என்று சரியான முகாந்திரம் கூறியதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. 12)திரு.பாக்கியராஜ் எழுத்தர் (தற்காலிகம்) என்பவர் தனது சட்டைப்பையில் ரூ.40 வைத்திருந்தார், அந்த பணமானது தனது சொந்த பணம் என்று சரியான முகாந்திரம் கூறியதால் அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ.எண் | பெயர் மற்றும் பதவி | சொந்தபணம் | கணக்கு கூற இயலாத பணம் |
|---|---|---|---|
| 1 | திருமதி.காமாட்சி உதவி கணக்கு அலுவலர், தொழிலாளர் உதவி ஆணையர் அலுவலகம், அரியலூர். | ரூ.3010 | ரூ.1300 |
| 2 | திரு.நூருல்லா கண்காணிப்பாளர், | ரூ.630/– | – |
| 3 | திரு.சின்னதுரை உதவியாளர், | ரூ.1670/– | – |
| 4 | திரு.செந்தில்வேலன் உதவியாளர், | ரூ.520/– | – |
| 5 | திருமதி.மணிமேகலை உதவியாளர், | ரூ.20/– | – |
| 6 | திரு.சுரேஷ்பாபு அலுவலக உதவியாளர், | இல்லை | – |
| 7 | திருமதி.சாந்தி ராமேஷ்வரிகணினிஆப்ரேட்டர், | ரூ.20/– | – |
| 8 | திரு.பிரபாகாரன் எழுத்தர் (தற்காலிகம்), | ரூ.170/– | – |
| 9 | திருமதி.ரம்யா எழுத்தர் (தற்காலிகம்), | ரூ.3000/– | ரூ.16,000/– |
| 10 | திருமதி. பகவதிகணினிஆப்ரேட்டர் (தற்காலிகம்), | ரூ.2270/– | – |
| 11 | திரு.பெரியசாமி கணினிஆப்ரேட்டர் (தற்காலிகம்), | ரூ.60/– | – |
| 12 | திரு.பாக்கியராஜ் எழுத்தர் (தற்காலிகம்), | ரூ.40/– | – |
| சரியான முகாந்திரம் கூற இயலாத மொத்த பணம் | | | ரூ.17,300/– |

மேற்படி நபர்களிடம் அவர்கள் வைத்திருந்த பணத்திற்குண்டான காரணத்தை கேட்க அரியலூர், தொழிலாளர் உதவி ஆணையர் அலுவலகத்தில் தனிநபர் பண இருப்பு பதிவேடு பராமரிக்கப்படுவதில்லை என்றும் அவர்கள் தங்களது சொந்த பணம் என்று சரியான முகாந்திரம் தெரிவித்ததால் அவர்களிடம் அந்த பணம் திருப்பி கொடுக்கப்பட்டது. ஆனால் மேற்படி நபர்கள் சரியான முகாந்திரம் கூற இயலாத மற்றும் கணக்கு கூற இயலாமல் வைத்திருந்த பணம் யாரிடமாவது கையூட்டாக பெற்று வைத்திருந்த பணமாக இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் மேற்படி கணக்கு கூற இயலாத மொத்தம் பணம் ரூ.17,300/—ம் திடீர் சோதனையின் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது. அரியலூர், தொழிலாளர் உதவி ஆணையர் அலுவலகத்தில் மாவட்ட துணை ஆய்வு குழு அலுவலர் கீழ்கண்ட 9 ஆவணங்கள் இந்த திடீர் சோதனையின் மேல்நடவடிக்கைக்காக கைப்பற்றப்பட்டது.

| வ.எண் | கைப்பற்றப்பட்ட ஆவணங்களின் விபரம் |
|---|---|
| 1 | அரியலூர், தொழிலாளர் உதவி ஆணையர் அலுவலக வருகைப் பதிவேடு 2019. |
| 2 | அரியலூர், தொழிலாளர் உதவி ஆணையர் அலுவலக தினகூலிபணியாளர் வருகைப் பதிவேடு 2019. |
| 3 | அரியலூர், தொழிலாளர் உதவி ஆணையர் அலுவலக தற்செயல் விடுப்புப் பதிவேடு 2019. |
| 4 | அரியலூர், தொழிலாளர் உதவி ஆணையர் அலுவலக P.A Cash Register. |
| 5 | அரியலூர், தொழிலாளர் உதவி ஆணையர் அலுவலக வாகன (TN61G 0228)தின நாட்குறிப்பு பதிவேடு |
| 6 | 23.10.2019 ம் தேதி பெறப்பட்டஉறுப்பினர் விண்ணப்பங்கள்—22 |
| 7 | அரியலூர், தொழிலாளர் உதவி ஆணையர் அலுவலக தினசரி பதிவு விண்ணப்பங்கள் பெறும் பதிவேடு(13.08.2019 முதல்) |
| 8 | அரியலூர், தொழிலாளர் உதவி ஆணையர் அலுவலக கேட்பு மனுபதிவேடு(2019—2020) |
| 9 | 2017—18 ம் ஆண்டின் பயனடைந்த பயனாளிகளின் எண்ணிக்கை தொகை விபரங்கள்அடங்கிய கோப்பு. |

மேற்படி அரியலூர், தொழிலாளர் உதவி ஆணையர் அலுவலக, அலுவலர்களை விசாரணைக்கு தேவைப்படும்போது விஜிலென்ஸ் அலுவலகத்தில் ஆஜர் ஆகும்படி மாவட்ட துணை ஆய்வு குழு அலுவலர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. இந்த திடீர் சோதனை செயல்முறைகள் இரவு 20.00 மணிக்கு முடிக்கப்பட்டது.

23.10.2019 ஆம் தேதி அரியலூர் தொழிலாளர் உதவி ஆணையர் அலுவலகத்தில் திடீர் ஆய்வின் போது கைப்பற்றப்பட்ட மொத்தம் ரூபாய். 17,300/– லஞ்சத் தொகையாக கருதப்படுவதால் அதன் மீது பூர்வாங்க விசாரணை செய்து மேற்படி திருமதி. காமாட்சி, உதவி கணக்கு அலுவலர், தொழிலாளர் உதவி ஆணையர் அலுவலகம் அரியலூர் மற்றும் அலுவலகத்திலுள்ளவர்கள் மீது ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இத்துடன் 23.10.2019 ஆம் தேதி தயார் செய்யப்பட்ட திடீர் ஆய்வு செயல்முறைகள் மற்றும் ரொக்கம் ரூபாய் 17,300/– மற்றும் இதர ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளது. தங்கள் உண்மையுள்ள, (ஒப்பம் ஆங்கிலத்தில்) பெ.வேலுமணி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் (தற்காலிகம்) / மண்டல துணை வட்டாட்சியர், செந்துறை தாலுக்கா, அரியலூர். அய்யா, இன்று 24.10.2019 ஆம் தேதி 20.00 மணிக்கு மேலே கண்ட புகார் மனு தொடர்பாக சட்ட கருத்துரை பெற்று அரியலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 5/2019 U/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 and 102 Cr.P.C. ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது.

24/10/19

(R.சந்திரசேகர்)
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
அரியலூர்.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் அசலினை வாதியின் புகார் மனுவையும் இணைத்து கனம் தலைமை நீதித்துறை நடுவர்/ சிறப்பு நீதிபதி, அரியலூர் அவர்களுக்கு அனுப்பியும், இதர நகல்கள் சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பியும், நகல் ஒன்று நிலைய கோப்பிலும் வைக்கப்பட்டது.

24/10/19

(R.சந்திரசேகர்)
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
அரியலூர்.